2014 ஜூலை 10]

நான், மக்களோடு நான் என்னும் மாதவத்தில் வாழ்கின்ற மனசாட்சியே எங்கள் அம்மா, கையேந்தி நிற்போருக்கு கை நேசை தேவத் தேவ அள்ளித் தரும் கனியே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சியோடு மோதிப் பார்க்க நினைப்போரை காலாவதியாக்கும் துணிவே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிலா திட்டங்கள் தந்து ஏற்றம் தந்த தாயே எங்கள் அம்மா, வாஞ்சையோடு என்னையும் வாழ்விக்கும் அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதியில் நெடுங்குடி இராசாபுரம் கிராம மக்களின் கோரிக்கையினை ஏற்று, ஏற்கெனவே இருந்த 16 கே.வி.ஏ. மின்மாற்றியை 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியாக மாற்றம் செய்து தந்த கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

97—

சொந்தக் கட்டடம்

*43808—திரு. கார்த்திக் தொண்டைமான்:

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சி, கொன்னையன் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சி, கெண்டையன் தெருவில் முதன்மை அங்கன்வாடி மையம் 25-2-2010 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட ஊராட்சி ஒன்றியத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சர்வே எண் 532-ல் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்குக் கட்டடம் கட்ட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்தின் அனுமதி பெற்று, விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயத்தில் அன்னமிட்டு, பள்ளியில் பந்தியிட்டு, விலையில்லா அரிசி தந்து, ஏழைகளின் முகத்தில் நிரந்தர சிரிப்பைத் தந்த தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) அகிலமும் வணங்கும் தெய்வம் நீங்களே. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, நன்றியைக் கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

மாணவர் விடுதி

***21306—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டம், ராஜாமடம் ஊராட்சியிலுள்ள அரசு பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?